23rd August 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : A co-operative spinning mill is already functioning in Tirunelveli district. Another in the Ramanathapuram district went into production in July 1961. Licence for the establishment of a co-operative spinning mill in Salem dstrict has been issued and steps are being taken to organize the mill. The Government of India have also issued recently a licence for the establishment of a co-operative spinning mill at Kancheepuram. The question of organizing co-operative spinning mills in the remaining districts of the State is being considered.

SRI K. VINAYAKAM : புதிதாகச் சேர்க்கப்பட்ட திருத்தணித் தாலுக்காவில் நூற்பாலை ஏற்படுத்த நடவடிக்கை நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. அது உண்மைதானா? அதற்கு வேண்டிய லைசென்சு மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறதா? அப்படிக் கொடுத்திருந்தால் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு அல்ல. தனியார் துறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சர்க்கார் சொல்லத் தயாரில்லை.

SRI K. R. NALLASIVAM : கோவையில் உள்ள நெசவாளர்கள் அங்கே கூட்டுறவுத் துறையில் ஒரு நூற்பு மில் வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக இப்போது ஸ்பிண்டில் கொடுக்க மறுக்கிறார்கள் மத்திய சர்க்கார். கோவையில் போய்க் கேட்டோம் என்றால் வருகிற சான்சும் குறைந்து போகும்.

SRI A. MARIAPPAN : திருச்சிராப்பள்ளி, வடாற்காடு ஜில்லாக்களில் கூட்டுறவு ஆலைகள் நடத்த செய்யப்பட்ட ஏற்பாடுகள் எந்த நிலைமையில் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : வடாற்காடு ஜில்லாவில் கூட்டுறவு ஆலை ஏற்படுத்துவதற்கு இப்போது முயற்சி நடந்துகொண்டிருக்கிறது.

Kottai Pillaimars

* 1370 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government are taking any ameliorative measures for the well-being of the Kottai Pillaimars community in the town of Srivaikuntam?

THE HON. SRI P. KAKKAN : No, Sir. The Community is also not classified as a Backward Class.

SRI A. A. RASHEED : இந்தக் கோட்டைப் பிள்ளைமார்கள் ஒரு கோட்டைக்குள் இருப்பதாகவும், அந்நியர்கள் யாரும் அங்கே நுழையக்கூடாது என்று சொல்வதாகவும், மிகவும் பிற்பட்ட

[23rd August 1961

நிலையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே, இதர பகுதியில் உள்ள நாகரீகம் அவர்களிடத்திலும் பரவ சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : கோட்டைப் பிள்ளைமார் வசிக்கின்ற பகுதிக்கு அந்நியர் என்றால் ஆண்கள் தான் போகக் கூடாது. பெண்கள் போகலாம். உள்ளேயும் பர்தா முறையைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பாக்வர்ட் கம்யூனிடியின் கீழ் வரவில்லை என்று கலெக்டர் தெரிவித்திருப்பதால் எந்த விதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

SRI K. VINAYAKAM : இந்தக் கோட்டைப் பிள்ளைமார் ஜனத்தொகை 300-க்குமேல் இருக்காது என்றும், அந்த இனத்துப் பெண்கள் வெளியே வருவது இல்லை என்றும், இறந்து போனால் தான் அந்தப் பிணம் வெளியே கொண்டு வரப்படும் என்றும் சொல்கிறார்களே, அவர்களுக்கு உள்ளேயே படிக்க வசதி, சுகாதார வசதி ஆகியவற்றையெல்லாம் செய்துகொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஜனத்தொகை 300 இருக்கும் என்று சொன்னதுகூட, இல்லை. 80 பேர்கள் தான் என்று கலெக்டர் கொடுத்திருக்கும் தகவலில் இருந்து தெரிகிறது. அங்கே கல்வி அளிக்க வசதி செய்யப் பட்டிருக்கிறது. பெண் ஆசிரியைகள்தான் செல்கிறார்கள்.

DR. (SRIMATHI) SOUNDARAM RAMACHANDRAN : இந்தக் கோட்டைப் பிள்ளைமார்கள் ஜனத்தொகையில் மிகவும் குறைந்தவர்களாக இருப்பதாகவும், மிகவும் பிற்பட்டவர்களாக இருப்பதாகவும், பின்தங்கிய வகுப்பு ஜாபிதாவில் சேர்க்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்வதாகவும் கேள்விப்படுகிறேன். கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் அவர்கள் மிகவும் பிற்போக்காகவே இருக்கிறார்கள். அவர்கள் ஜனத்தொகையும் குறைந்து வருகிறது. ஆகவே மீண்டும் இதைப் புனராலோசனை செய்து அவர்களைப் பிற்பட்ட இனத்தில் சேர்க்க அரசாங்கத்தார் முன்வருகிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : முன்பு எத்தனை பேர் இருந்தார்கள் என்ற கணக்கு என்னிடம் இல்லை. அது தெரிந்தால் ஜனத்தொகையில் குறைந்திருக்கிறார்களா இல்லையா என்று கணக்குப் பார்க்க முடியும். இப்போது அவர்கள் குறைவாகவேதான் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் அல்ல. பாக்வர்ட் லிஸ்டில் சேர்க்கப்பட தகுதி இல்லை என்று கலெக்டர் சொன்னதால் அவர்கள் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்தக் கோட்டைப் பிள்ளைமாரினுடைய பழக்கம் தீண்டாமை, பாராமை, கலந்து உண்ணாமை என்று இருப்பதால் தீண்டாமை விலக்குச் சட்டப்படி இந்த முறையை மாற்ற ஏதேனும் வழி செய்ய முடியுமா ?

23rd August 1961]

THE HON. SRI P. KAKKAN : அந்த மாதிரி எவ்விதத் தகராறும் வரவில்லை. வந்தால் பார்க்கலாம்.

SRI K. B. S. MANI : கோட்டைப் பிள்ளைமார் எந்த எந்தப் பகுதியில் இருக்கிறார்கள்? அவர்களுடைய பரம்பரைத் தொழில் என்ன? ஜீவனத்திற்காக என்ன என்ன முறைகளைக் கையாண்டு வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : ஒரு காலத்தில் பெரிய நிலச்சுவான்தார்களாக இருந்தார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : ஜனத்தொகை குறைவுக்குக் காரணம் அவர்களிடையே அதிகப் பெண்கள் இல்லை என்பதும் ஒன்றா? (சிரிப்பு.)

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் கேள்விக்கு நான் எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாது இருக்கிறேன்.

DEPUTY SPEAKER: Questions are over.

Note—**An asterisk * at the commencement of a speech indicates revision by the member].**

II.—CALLING ATTENTION TO THE FAILURE TO TAKE PREVENTIVE MEASURES AGAINST THE FLOODS IN THE CAUVERY.

DEPUTY SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a matter under rule 41. I think the hon. Member will read the notice.

SRI M. KALYANASUNDARAM : I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz., failure of the Public Works Department to take adequate precautionary and preventive measures during the floods in the Cauvery in July 1961.

THE HON. SRI P. KAKKAN: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையில் இதுபற்றி ஒரு ஸ்டேட்மெண்டு சபையில் வைக்கப்பட்டிருக்கிறது, 25-ந் தேதி இதுபற்றியே விவாதிக்க இருப்பதனால் அங்கத்தினர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும், அதற்கு நான் பதில் முழுமையாக அளிக்கிறபோது எல்லா விஷயங்களையும் கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.